013

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 04
LWU 2314 – அரசியலமைப்புச் சட்டம் II
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 08.04.2006 நேரம்: மு.ப 9.30 - ந.ப 12.30

ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி 1 - அடிப்படை உரிமைகள்
இப்பகுதியில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

1. சுனாமியால் பாதிப்படைந்தவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக ஜனாதிபதி "சுனாமி வீடமைப்பு சபை"(THB – Tsunami Housing Board) ஒன்றை உருவாக்கினார். THB உடைய இயக்குனர் சபை 7 அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது. இதில் 4 பேர் சமூக மற்றும் நலன்புரி அமைச்சரினால் நியமிக்கப்பட்டார்கள். மிகுதியானவர்கள் சுனாமி வீடமைப்பு திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களில் (NGO) இருந்து நியமனம் பெற்றார்கள். வீடமைப்புக்குரிய நிதி மற்றும் சபையினுடைய செயற்பாடுகளுக்குரிய நிதி சுனாமி வீடமைப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. நாற்பத்தைந்து வீதமான சுனாமி வீடமைப்பு நிதி சமூக மற்றும் நலன்புரி அமைச்சினாலும் 45% நிதி சுனாமி நிவாரண உதவிகளுக்காக NGO வினால் சேகரிக்கப்பட்ட நிதியிலும் இருந்து பெறப்பட்டது எஞ்சிய 10% வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்டது. நாடு பூராவும் சுனாமியால் அழிந்த வீடுகளை புணர் நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரே ஒரு நிறுவனம் இதுவாகும்.

   சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதலானது அரசாங்கத்தினுடைய ஒரு பாரிய இலக்கு என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

   பேரலிய என்ற இடத்தில் வசிக்கும் சமன் சுனாமியால் தனது வீட்டை இழந்தான். சுனாமி வீடமைப்பு சபை தயாரித்த பட்டியலில் தனது வீடு குறிப்பிடப்படவில்லை என்பதை தெரிந்து கொண்ட சமன், THB க்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்ய விரும்புகிறான்.

   சமனுடைய நடவடிக்கையில் அவன் வெற்றிபெறுவான் என நீர் கருதுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தருக.

2. "சித்திரவதை என்ற நடைமுறையானது அனைத்து நாகரீகமடைந்த சமுதாயங்களிலும் தடுக்கப்பட்ட ஒன்றாகும். சித்திரவதை அல்லது மனிதாபிமானமற்ற நடத்துகையில் இருந்து விடுபடுவதற்கான சுதந்திரம் என்ற உரிமையானது, எந்தவொரு நிபந்தனையின் கீழும் எந்த வித மட்டுப்பாட்டுக்கோ அல்லது வலுக்குறைப்புக்கோ உட்படாத ஒரு முழுமையான உரிமை என்ற விடயத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது,..."

   Fundamental Rights in Sri Lanka – ஒரு கருத்துரைப்பு. by Justice S.Sharvananda . at page 69
   அடிப்படை உரிமைகளினால் மனித கௌரவம் பாதுகாக்கப்படுகிறது என்ற கண்ணோட்டத்தில் இக்கூற்றை ஆராய்க.

3. பேர்டி என்பவரினால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டட கார்டூன் சித்திரம் ஒன்றின் காரணமாக அப்பத்திரிகையை அரசாங்கம் தடைசெய்ய முயற்சி எடுக்கிறது என்ற ஒரு தகவலுக்கு எதிராக "கபுட்டா" என்ற பத்திரிகையின் பிரதம கார்டூன் வரைவாளர் தனது பத்திரிகையில் சக ஊழியர்களுடன் சேர்ந்து எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டார். எதிரப்பாளர்கள் சுவரொட்டிகள், கொடிகள் என்பவற்றை வெளிக்கொணர்ந்ததோடு, ஊழியர்களில் சிலர் மேள வாத்தியங்களுடன் தமது மகிழ்ச்சியை கொண்டாடினர். கபுட்டா பத்திரிகையின் பதிப்பாசிரியர் சில்வா என்பவரால் எழுதப்பட்ட கவிதை ஒன்றை உள்ளடக்கிய துண்டு பிரசுரங்கள் சிலவற்றினை ஆர்ப்பாட்டக்காரர்கள் தம்வசம் வைத்திருந்தனர். அந்த கவிதைகளை பாடியவாறு அவர்கள் நடனமாடினர். எதிர்ப்பு ஊர்வலத்தின் போது பொலிஸார் அவர்களை தாக்கியதோடு, சுவரொட்டிகள், கொடிகள், துண்டு பிரசுரங்கள், மேளம் என்பவற்றை நாசமாக்கினர். மேலும் அப்பத்திரிகைக்கு சொந்தமான செற்றலைட் அன்டனா ஒன்றையும் பொலிஸார் சேதப்படுத்தினர். பேர்ட்டி, சில்வா மற்றும் ஏனைய பத்திரிகை ஊழியர்கள் இந்த அனைத்து தாக்குதல்களுக்கும் எதிராக பொலிஸாருக்கு எதிராக வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய விரும்புகின்றனர்.

அவர்களுடைய வழக்கு நடவடிக்கை வெற்றி பெறுமா என்பது தொடர்பில் அறிக்கையொன்றை தயாரிக்க.

4. உலகம் மேலும் மேலும் அசமத்துவ நிலையை அடைந்து வருகின்றபோது மக்களிடையே சமத்துவம் என்பதை அடைவது மிகவும் கடினமான ஒன்றாகும். ஆகையால் உலகமானது ஏற்றத்தாழ்வுகளை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். எனினும் ஏற்றத்தாழ்வு காணப்படும் விடயங்களிற்கு பரிகாரம் வைத்துகொள்ளும் அதே வேளை சட்டமானது அனைவரையும் சம அடிப்படையில் நடத்தல் வேண்டும்.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? சமத்துவத்துக்கான உரிமை என்ற கோட்பாட்டை, தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

## பகுதி 11 - அதிகார பகிர்வு

இப்பகுதியில் இருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

5. 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் 13வது திருத்தமானது மக்களுடைய நீதிமுறை அதிகாரத்திற்குரிய பல முக்கியமான மாற்றங்களை செய்துள்ளது என சிலர் கருதுகிறார்கள். எவ்வாறாயினும் 13வது திருத்தம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு மீள ஒழுங்கமைத்தலை மட்டுமே செய்துள்ளது என்பது புலனாகிறது. 13வது திருத்தத்துடைய நோக்கம், மக்களுக்கு அருகில் நீதியை கொண்டு செல்வது என்ற விடயத்தை மேலே குறிப்பிட்ட இக்கண்ணோட்டம் ஆதரிக்கின்றது.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? தீர்க்கப்பட்ட வழக்குகளை கொண்டு உமது விடைக்குரிய காரணங்களை தருக.

6. அரசியலமைப்பின் 13வது திருத்தம் 1978ஆம் ஆண்டு குடியரசு அரசியல் அமைப்பின் அடிப்படை அமைப்பை மீறி உள்ளது என்றும்,அது மக்களுடைய சட்டவாக்க மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என வாதிடப்படுகிறது. இத்திருத்தமானது குறைத்து மதிப்பிடப்படுவதுடன் அதன் காரணமாக 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 82(1), உறுப்புரை 2, மற்றும் உறுப்புரை 3 மற்றும் என்பவற்றுடன் முரண்படுவதாக வாதிடப்படுகிறது.

இக்கூற்றின் சரியான தன்மையை அரசியலமைப்பின் 13வது திருத்தத்துடன் தொடர்புறுத்தி பகுப்பாய்வு செய்க.

7. மாகாண சபையொன்றினுடைய சட்டவாக்க அதிகாரங்கள் இன்னும் மத்திய அரசாங்கத்தினுடைய சட்டவாக்க இறைமை என்ற கருத்தேற்புக்குள் தக்க வைத்துக்கொள்ளப் பட்டுள்ளது. மாகாணசபையுடைய அதிகாரமானது மத்திய சட்டவாக்கத்தினுடைய அதிகாரத்திற்கு எந்தவொரு பொருளுள்வான மட்டுப்பாடும் இல்லை என்ற விடயத்திற்கு அமைவாகவே காணப்படுகிறது.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

8. அதிகார பகிர்வு (Devolution of Power) என்ற விடயத்தின் மீது ஆராய்ச்சி ஒன்றை நடத்தும் ஆராய்சிக்குழுவின் தலைமை உறுப்பினர் ஒருவரான பியல் பின்வரும் கருத்தேற்புகளை பகுப்பாய்வு செய்யுமாறு வேண்டப்படுகிறார். இக்கருத்தேற்புக்களாவன சமஷ்டிவாதம், அதிகாரப்பரவலாக்கம் மற்றும் அதிகார குவிப்பு (Federalism, Decentralization, Deconcentration)

பியலுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட இக்கருத்தேற்புக்களை அதிகார பகிர்வு கருத்தேற்புகளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வொன்றை சமர்ப்பிக்குமாறு நீர் எதிர் பாரக்கப்படுகின்றீர். எடுத்துக்காட்டுகளுடன் உமது அறிக்கையை தயார் செய்க.

(பதிப்புரிமைபெற்றது)